# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.161/2025

**Deposition of Witness for Prosecution PW 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் அருள்மதிகண்ணன் | Father's Name | : மதியழகன் |
| Village | : தஞ்சாவூர் | Taluk | : தஞ்சாவூர் |
| Calling | : | Age | : 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of March 2026.**

**(A1 & A2 are present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.2, Dated 18.03.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை மாவட்ட நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 1775, நாள் 18.03.2026 ன்படி டாக்டர் அருள்மதிகண்ணன் அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் திரு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:06 +0530

K.சதீஷ்குமார் (Assistant Programmer) என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை தடயவியல் மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 08.05.2025 அன்று பணியில் இருந்த போது திருத்துறைப்பூண்டி காவல் வட்ட ஆய்வாளரிடமிருந்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. எஸ். இளங்கோவன் என்பவர் மூலமாக சற்றுஏறப்ப 32 வயதுடைய அரவிந்த்மோகன் , த/பெ. பாலகிருஷ்ணன் என்பவருடைய சடலத்திற்கு பிரேத பரிசோதனை செய்யும்வேண்டுகோள் கடிதத்தை மதியம் 2.15 மணிக்கு பெற்றேன். கோட்டூர் காவல்நிலைய குற்ற எண்.86/2025 தொடர்புடைய பிரேதத்தின் அடையாளத்தை காவலர் உறுதி செய்தபின் மதியம் 02.30 மணிக்கு பிரேத பரிசோதனையை துவங்கினேன். சடலத்தை முதலில் பார்த்த போது உலர்ந்த நிலையில் இரத்த திட்டுக்களுடன் மல்லாந்து படுக்க வைக்கப்பட்ட நிலையில் சடலத்தின் தலை மற்றும் கழுத்து பகுதி வரை மரணத்திற்கு பிந்தைய விறைப்பு தன்மையுடன் காணப்பட்டது. நன்கு ஊட்டமுடைய, சமச்சீரான உடல்வாகு கொண்ட ஆண் சடலம் உடல் நிறம் அடர் பழுப்பு நிறத்தில் இருந்தது. இரு கண்களும் மூடிய

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.24 10:39:11 +0530

நிலையில் இருந்தன. அனைத்து கை மற்றும் கால் விரல் நகங்கள் வெளிறி காணப்பட்டன. வாய், மூக்கு, காது பகுதி சாதாரணமாக இருந்தது. வயிறு மற்றும் மார்பு பகுதி சீராக காணப்பட்டது. அழுகிய நிலை மாற்றங்கள் ஏதும் சடலத்தில் காணப்படவில்லை. இரத்தம் தோய்ந்த மருத்துவ கட்டு தலைப்பகுதி, இடது மணிக்கட்டு, வலது முன்னங்கை மற்றும் கை, வலது தொடை பகுதிகளில் காணப்பட்டன.

சடலத்தில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன. காயம் 1. வலது காதுக்கு பின்னே 4x1 cm கீறல் காயம் இருந்தது. காயம் 2. வலது கன்னத்தில் சாய்வலான 8x1 x0.5 cm ஆழ வெட்டுக்காயம் இருந்தது. காயம் 3. நெற்றியின் நடுப்பகுதியில் எலும்பு ஆழத்திற்கு 2x2cm வெட்டுக்காயம் இருந்தது. காயம் 4. இடது கண் புருவத்திற்கு 8cm வெளியே தலையின் பக்கவாட்டுப்பகுதியில் 4x1cm எலும்பு ஆழம் கொண்ட வெட்டுக்காயம் இருந்தது. காயம் 5. இடது காதின் கீழ்ப்பகுதியில் 7x1x2 cm ஆழ வெட்டுக்காயம் இருந்தது. காயம் 6. கழுத்து பகுதியில் 10x1 cm தையலிடப்பட்ட காயம் இருந்தது, தையல்களை பிரித்ததில் சாய்வலான வரம்பு கொண்ட தண்டுவட ஆழம் உடைய வெட்டுக்காயம் இருந்தது. காயம் 7. வலது தோள்பட்டையில் 5x1 x1 cm தையலிடப்பட்ட காயம் இருந்தது, அதை பிரித்ததில் சாய்வலான வரம்புகள் கொண்ட 1cm

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:16 +0530

ஆழ வெட்டுக்காயம் இருந்தது. அதன் வெளிப்புற முனையில் இருந்து கீறல் காயம் நீண்டிருந்தது. காயம் 8. வலது தோள்பட்டையில் முன்புறத்தில் 15x 1 cm கீழ் நோக்கிய கீறல் காயம் நீண்டிருந்தது. காயம் 9. வலது புஜத்தின் மேல்பகுதியில் கிடைமட்ட நிலையில் 8x1 cm தையலிடப்பட்ட காயம் இருந்தது. அதை பிரித்ததில் சாய்வலான வரம்புகள் கொண்ட 2 cm ஆழ காயம் இருந்தது. காயம் 10. வலது புஜத்தின் நடுப்பகுதியில் 5x1 cm தையலிடப்பட்ட காயம் இருந்தது. அக்காயம் முந்தைய காயத்துடன் இணைந்த நிலையில் இருந்தது. தையல்களை பிரித்ததில் சாய்வலான வரம்புகள் கொண்ட 1.5cm ஆழ காயம் இருந்தது. காயம் 11. வலது புஜத்தின் வெளிப்பகுதியில் 23x1 cm கீறல் காயம் இருந்தது. காயம் 12. இடது தோள்பட்டையில் 13x1cm கீறல் காயம் இருந்தது. காயம் 13. வலது கை முட்டியில் 5x 2x2 cm ஆழ கன்றிய காயம் இருந்தது. காயம் 14. வலது முன்கையின் நடுப்பகுதியில் தசை ஆழமுடைய 6x 5 cm கன்றிய காயம் இருந்தது. காயம் 15. வலது முன்கையில் கீழ்ப்புறத்தில் 5x 2 x2cm ஆழ வெட்டுக்காயம் இருந்தது. காயம் 16. வலது கையில் ஆள்காட்டி மற்றும் நடுவிரல் இடையில் 16x 6 cm அளவில் தசைகள், எலும்புகள் வெளித் தெரியும்படியான எலும்பு ஆழ வெட்டுக்காயம் இருந்தது. காயம் 17. வலது தொடையில் 3x1 cm தையலிடப்பட்ட காயம் இருந்தது, அதை பிரித்ததில் 1.5 cm ஆழ

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:22 +0530

வெட்டுக்காயம் இருந்தது. காயம் 18. இடது கை முட்டியில் 6x5x 1 cm ஆழ வெட்டுக்காயம் இருந்தது, அதன் வெளிப்புற வரம்பில் தோல் கிழிந்து தொங்கிய நிலையில் இருந்தது- காயம் 19. வலது புஜத்தின் நடுப்பகுதியில் பின்புறத்தில் 3x 1 x 0.5 cm வெட்டுக்காயம் இருந்தது. காயம் 20. இடது புஜத்தின் கீழ்ப்பகுதியின் பின்புறத்தில் 7x3 cm எலும்பு ஆழ வெட்டுக்காயம் இருந்தது. காயம் 21. கழுத்தின் மேல்பகுதியில் பின்புறத்தில் 7 x 1 x 6 cm ஆழ வெட்டுக்காயம் இருந்தது. காயம் 22. தலையை திறந்ததில் (i) இடது பக்கவாட்டு மற்றும் பின்பகுதியில் மண்டைஓட்டுத் தோல் ஆழமுடைய கன்றிய காயம் 22x13 cm அளவில் இருந்தது. (ii) மண்டைஓட்டு எலும்பின் முன்பகுதியில் வலதுபுறத்தில் 3x2 cm ல் மண்டைஓட்டு ஆழம் உடைய வெட்டு எலும்பு முறிவு இருந்தது- இது காயம் எண்.4 உடன் ஒத்து இருந்தது. (iii) மூளை வெளிறிய நிலையில் காணப்பட்டது, எலும்பாய்வில் பெருமூளையில் இடது கோள பின்பகுதியில் மூளை திசுக்களிடையே இரத்தக்கசிவு காணப்பட்டது.

பிற உறுப்புகளில் ஆராய்ந்ததில் வயிற்றின் உட்புறம், மார்பு எலும்புகள் இயல்பு நிலையில் இருந்தன. இதயம் சற்று அளவில் பெரியதாக உள் அறைகளில் திரவ இரத்தத்துடன் இருந்தது. நுரையீரல்கள் வெளிர் ஊதா நிறத்தில் பஞ்சு போன்று அழுத்தும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:26 +0530

போது இரத்தம் கலந்த நுரைத்த திரவம் கசிந்தபடி இருந்தது. நாவடி எலும்பு உடையாமல் இருந்தது. இரைப்பையினுள் 150 கிராம் அடர் பழுப்பு நிற குழைவான பகுதி செரிமானம் ஆன உணவுப்பொருட்கள் இருந்தன. அதிலிருந்து வாசனையை பிரித்தறிய இயலவில்லை. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரண அளவில் திசுக்கள் வெளிறி காணப்பட்டன. சிறுகுடலில் பழுப்பு நிற குழைவான வாசனையை பிரித்தறிய இயலாத கூழ்மப்பொருட்கள் இருந்தன. சிறுநீர் பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு பகுதி மற்றும் தண்டுவட மண்டலம் சாதாரணமாக காணப்பட்டன. மூளை காயத்தில் குறிப்பிட்டுள்ளவாறு இருந்தது.

சடலத்தில் இருந்து உறுப்பு மாதிரிகள் இரசாயண பகுப்பாய்விற்காகவும், இரத்தம் தோய்ந்த உலர்ந்த மருத்துவ துணி இரத்த மாதிரி பரிசோதனைக்காகவும் சேகரிக்கப்பட்டு சடல பொறுப்பு காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது. பிரேத பரிசோதனையை முடித்து மேற்படி நபர் அவருடைய உடலில் பல்வேறு பாகங்களில் ஏற்பட்ட பல கூரிய விசையினால் உண்டான காயங்களின் விளைவுகளால் மரணம் அடைந்துள்ளார் என்ற முதன்மை கருத்துரையை வழங்கினேன். இருப்பினும் இறுதி கருத்துரையானது இரசாயண பகுப்பாய்வு அறிக்கையில் முடிவுக்காக காத்திருப்பில்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:31 +0530

வைக்கப்பட்டது. பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ. 8 ஆகும்.** அதன் தொடர்ச்சியாக 17.06.2025 அன்று இரசாயன பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்டது. அதில் உறுப்பு மாதிரிகளில் எந்த நச்சுப்பொருளோ, சாராயமோ கண்டறியப்படவில்லை என்று முடிவு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை **அ.சா.ஆ.9 ஆகும்.** மேற்படி நபர் அவருடைய உடலின் பல்வேறு பாகங்களில் உண்டான பல கூரிய விசையினால் உண்டான காயங்களின் விளைவுகளால் மரணம் அடைந்துள்ளார் என்று இறுதி கருத்துரை வழங்கினேன். அந்த இறுதி கருத்துரை **அ.சா.ஆ-10. ஆகும்.** மேற்படி காயங்கள் கூரிய அருவாளால் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

ஆய்வாளர் என்னை 08.05.2025 அன்று விசாரித்தார். என்னிடம் எந்த மாதிரியான அருவாள் என்பதை காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரி. அருவாளின் வெட்டும் பகுதியால் கன்றிய காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரி. ஆனால் கீறல் காயம் ஏற்படும்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:35 +0530

**குறுக்கு விசாரணை (2 ம் எதிரி தரப்பில்)**

மேற்படி குறுக்கு விசாரணை அடாப்ட் செய்யப்படுகிறது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:39:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.